07.11.2025

OS No: 540/2019

பி.வா.சா. 3   திரு. பாண்டி த/பெ சேது

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1976ம் வருடம் பிறந்தேன். தாவா வழக்கிற்கு நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா வழக்கில் நானும், 3ம் பிரதிவாதியும் தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தின் அசல் யாரிடம் உள்ளது என்றால் 3ம் பிரதிவாதி செல்லப்பாண்டியிடம் உள்ளது. 3ம்பிரதிவாதி எந்த ஊரில் இருக்கிறார் என்றால் கொல்லங்குடியில் இருக்கிறார். நான் எந்த வருடம் முதல் வெளிநாட்டில் இருந்து வருகிறேன் என்றால் 2000 வருடம் முதல் இருந்து வருகிறேன், அவ்வப்போது வந்து செல்வேன். நான் கிரையம் பெற்ற சொத்திற்கு இன்றைய தேதி வரை எனது பெயரில் பட்டா ஏற்படவில்லை என்றால் சரிதான். வழக்கு போட்டுள்ளதால் பட்டா வாங்கவில்லை. கிரையம் சொத்தை வாங்கும் போது சொத்திற்கு வில்லங்க சான்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். வில்லங்க சான்று ஆவணத்தை கோர்ட்டில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நாங்கள் சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பே வாதிகள் தாவா சொத்தை கிரையம் பெற்றிருந்தார்கள் என்றால் தெரியாது. தாவா சொத்தை நாங்கள் கிரையம் பெற்ற பிறகு என் மீதும், வளர்மதி, செல்லப்பாண்டி, ராஜா ஆகியோர் மீதும் 1ம் வாதி முத்துராமலிங்கம் காவல் நிலையத்தில மோசடியான ஆவணம் மூலம் தாவா சொத்தை கிரையம் செய்துள்ளதாக புகார் கொடுத்தாரா என்றால் புகார் கொடுத்தார் மேற்படி புகாரின் பெயரில் விசாரணையில் கோர்ட்டு மூலமாக பிச்சனையை பார்க்க சொல்லி முடித்து வைக்கப்பட்டது. மேற்படி புகாரின் பேரில் என் மீதும் மேற்படி நபர்கள் மீதும் குற்ற எண். 264/2018 என்ற FIR பதிவு செய்யப்பட்டு அதன் பிறகு தான் மேற்படி வழக்கு முடித்து வைக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கு முடிக்கப்பட்டது என்பதை காட்டுவதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி குற்ற வழக்கு முடிக்கப்படவில்லை என்றும் தற்போது வரை நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து காளிமுத்தனுக்கு பாத்தியம் என்றால் சரிதான். காளிமுத்தன் எப்போது இறந்தார் என்றால் தெரியாது. தாவா சொத்து உள்ள ஊர் என்னுடைய ஊர் அல்ல என்றால் சரிதான்.

1974ம் வருடத்தில் நடந்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் கிரைய பதிவு நடந்துள்ளதாக கூறப்படும் விசயங்களை, மற்றும் 1ம் பிரதிவாதி தாயாரான திருவாயி என்பவருக்கு 5 செண்டு இடத்தை கிரையம் எழுதி கொடுத்ததாக கூறும் விசயங்கள் மேற்படி காளிமுத்தனுக்கு தெரியாது என எதன் அடிப்படையில் நான் சொல்லியுள்ளேன் என்றால் பிரதிவாதி வளர்மதிக்கு அவர் தாயார் சொல்லி மேற்படி வளர்மதி என்னிடம் தெரிவித்ததன் அடிப்படையில் சொல்லியுள்ளேன். பத்திர அலுவலகத்திற்கு காளிமுத்தன் வரவில்லை என்றும் கையெழுத்து செல்லவில்லை என்றும் வளர்மதி சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். கிரைய பத்திரத்தில் கண்ட சொத்தை தவிர மேற்படி ஊரில் வேறு சொத்து எதுவும் எனக்கு இல்லை என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் 08.12.2010ம் தேதி செட்டில்மெண்ட் பத்திரத்தை திருவாயி 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்ததாக சொல்லும் விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வளர்மதியின் தந்தை உயிருடன் இருக்கும் வரை அவரே அனுபவம் செய்து வந்த என்ற விவரமானது யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் வளர்மதி சொல்லி தெரியும். பி.வா.சா.ஆ.3 பட்டா ஆவணமானது வளர்மதி பெயரில் அதில் கண்ட சொத்திற்கு தனி பாத்திய உரிமை அவருக்கு இல்லாமல் தவறுதலாக ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணமானது அதனை ஏற்படுத்தி கொடுத்த நபருக்கு அதில் கண்ட சொத்தை பொருத்து உரிமை பாத்தியம் இல்லாமல் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் கிரையம் பெற்றது முதல் அனுபம் செய்து வருவதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் தாவா சொத்தை அதன் உரிமையாளரிடம் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.11.07 17:26:16 +0530